Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.693/2023

Deposition of Witness for — Prosecution PW-1 / Defence / Court

| | | |
|---|---|---|
| Name | : | சந்தோஷ்குமார் |
| Father's Name | : | மலையப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 20.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புங்கம்பாடியில் குடியிருந்து ஜேஜிபி டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன கனகராஜ் மற்றும் சுசிலா என்னுடைய அண்ணன் மற்றும் அத்தை ஆவார். கடந்த 30.09.2022ம் தேதி மாலையில் பாலவிடுதியில் பெரிய காரியத்திற்கு சென்றுவிட்டு திரும்ப என்னுடைய அண்ணன் வீட்டிற்கு வருவதற்காக எனது அண்ணன் மற்றும்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அவரது மாமியா சுசிலா TN 47 AJ 6079 என்ற பதிவெண் கொண்ட HONDA DUO இருசக்கர வாகனத்தில் எனது அண்ணன் கனகராஜ் இருசக்கர வாகனத்தை ஓட்ட அவரது அத்தை பின்னால் அமர்ந்து கொண்டும், நானும் மைத்துனர் செல்வராஜீம் மற்றொரு இருசக்கர வாகனத்தில் பாளையம் – கரூர் செல்லும் ரோட்டில் வெள்ளியணையில் உள்ள குழுமை ஏஜென்சி இன்டியன் ஆயில் பெட்ரோல் பங்க் அருகே இரவு 9.30 மணியளவில் எனது அண்ணனும் அவரது அத்தையும் முன்னால் செல்ல அவர்களுக்கு பின்னால் நாங்கள் சென்று கொண்டிருந்தோம்.

2) அப்பொழுது எங்களுக்கு பின்னால் கிரானைட் கற்களை ஏற்றிக் கொண்டு வந்த TN 59 BV 0040 என்ற லாரி எங்களை முந்திக்கொண்டு வேகமாக சென்று எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்த எனது அண்ணன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மேற்படி பதிவெண் கொண்ட லாரியை ஓட்டி வந்தவர் வேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து மோதினார். ஆஜர் எதிரி தான் மேற்படி பதிவெண் கொண்ட லாரியை ஓட்டி வந்த நபர் ஆவார். எனது அண்ணன் மற்றும் அத்தை சென்ற இருசக்கர வாகனத்தில் லாரி மோதியவுடன் கீழே விழுந்தவர்கள் மீது லாரியின் முன் சக்கரம் ஏறி இறங்கியதும் அவர்கள் இருவரும் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார்கள்.

3) அவர்களின் உடல்கள் சம்பவ இடத்தில் சிதறி கிடந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ் மூல் அவர்களின் உடல்களை எடுத்துக்கொண்டு கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். 01.10.2022ம் தேதி அதிகாலை 02.00 மணியளவில் வெள்ளியணை காவல் நிலையம் சென்று விபத்து குறித்து நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது–** பின்னர் மேற்படி மருத்துவமனைக்கு சென்று சவக்கிடங்கு முன்பாக இருந்தபோது காலை 8.00 மணியளவில் மருத்துவமனைக்கு வந்த போலீசார் என் அண்ணன் மற்றும்

ஓம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

அத்தை பிரேதத்தின் மீது பிரேத விசாரணை செய்தார்கள். நான் உடன் இருந்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) சம்பவம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 30.09.2022 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் நடைபெறும் சாலை பாளையம் – கரூர் செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற சாலை 40 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். இந்த விபத்தில் எதிரி ஓட்டி வந்த வாகனம் என்ன வகையான வாகனம் என்றால் கிரானைட் கல் ஏற்றிக்கொண்டு வந்த லாரி ஆகும். அந்த லாரியில் உள்ள சக்கரங்களின் எண்ணிக்கை எனக்கு தெரியாது. விபத்து எற்படுத்திய லாரியில் கிரானைட் கல் லோடு இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி லாரி மிக மெதுவான சாலையில் இடது புறமாக சாலை விதிகளை கடைபிடித்து எதிரியால் ஓட்டிச்செல்லப்பட்டது என்றால் சரியல்ல.

2) விபத்து நடைபெற்ற சாலையில் தடுப்பு சுவர்கள் எதுவுமில்லை. விபத்து நடைபெற்ற சாலை போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் சரிதான். சாலையின் ஓரத்தின் இருபக்கத்திலும் மின்கம்பங்கள் உள்ளதா என்றால் வலது புறத்தில் மின்கம்பம் உள்ளது. இடது புறத்தில் உள்ளதா என்பதை கவனிக்கவில்லை. இறந்து போன கனகராஜ் மற்றும் சுசிலா வின் உடல் கரூர் பாளையம் ரோட்டில் நடுபகுதியில் கிடந்தது என்பதை பார்த்தீர்களா என்றால் அடிப்பட்ட பகுதி இடது புறத்தில் தான் உடல் அனைத்து பகுதியிலும் சிதறி கிடந்தது நடு ரோட்டில் தான். கனகராஜ் ஓட்டி சென்ற வாகனம் HONDA DUO ஆகும். கனகராஜ் ஓட்டி சென்ற வாகனத்தின் உடைபட்ட பகுதி குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் வண்டியின் முன்பகுதி இண்டிகேட்டர், கேன்பேர், கெட்லைட் , வீல் சேதமாகி இருந்தது– நான் சம்பவ இடத்திற்கு செல்லும் போது லாரி இருந்தது.

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

3) சம்பவ இடத்திற்கு சென்று கனகராஜ் மற்றும் சுசிலா உடலை எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் 9.30 மணியளவில் பார்த்தேன். நான் 100 மீட்டர் தொலைவில் தான் வந்து கொண்டிருந்தேன். நான் சொல்வது போல் சம்பவ நடைபெற்ற இடத்தில் இல்லை என்று சொன்னாலும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. இறந்து போன கனகராஜ் எனது அண்ணன் என்பதால் அவர் இறந்தற்கு இழப்பீடு பெற்றுத்தர பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியால்ல. என்னுடன் வந்த செல்வராஜ் எனது மைத்துனர் ஆவார். சம்பவம் நடந்தவுடன் போலீசாருக்கு புகார் கொடுத்தேனா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன்.

4) சம்பவ இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தாக்கள் என்றால் சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்திலேயே வந்துவிட்டனர். போலீசார் சம்பவ இடத்திற்கு வரும் போது நான் அந்த இடத்தில் இல்லை. ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தது யார் என்றால் தெரியவில்லை. எத்தனை ஆம்புலன்ஸ் வந்தது என்று தெரியுமா என்றால் 2 வந்தது. எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸில் அவர்களின் உடல் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு போலீசார் வரும் போது எதிரி சம்பவ இடத்தில் தான் இருந்தார்.

5) நான் கரூர் அரசு மருத்துவனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் சம்பவம் நடைபெற்ற 30 நிமிடத்தில் சென்று விட்டேன். மருத்துவனையில் உள்ள புறகாவல் நிலையத்திலிருந்து என்னை விசாரணை செய்தார்களா என்றால் பசுபதிபாளையம் போலீசார் விசாரணை செய்தார்கள். பசுபதிபாளையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. விபத்து நடைபெற்ற விதம் குறித்து கரூர் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவர்களிடம் கூறினேனா என்றால் இல்லை. இறந்து போன கனகராஜ் எதிரே வந்த இருசக்கர வாகனத்தை வருவதை கவனிக்காமல் எதிரி ஓட்டி சென்ற லாரியை முந்தி செல்லும் போது எதிரே வந்த வாகனம் நெருங்கி

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

வந்ததனால் எதிரே வந்த வாகனத்தில் கெட்லைட்டில் கண் கூச்சம் ஏற்பட்டு எதிரி ஓட்டி சென்ற லாரியின் பின்புற சக்கரத்திற்கு முன்பாக விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து இறந்து போன கனகராஜின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி நான் கூறுவது போன்று கவனக்குறைாவாக வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.693/2023

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW-2<br>Defence<br>Court |
| Name | : | கார்த்திகேயன் |
| Father's Name | : | பரமசிவம் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 20.01.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது வெள்ளியணையில் குடியிருந்து குமூமை ஏஜென்சி இன்டியன் ஆயில் பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 30.09.2022 ம் தேதி நான் வழக்கம் போல் பெட்ரோல் பங்கில் நானும் கருப்புசாமி , பரசுராமன் ஆகியோர்கள் வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது பாளையம் – கரூர் ரோட்டில் TN 47 AJ 6079 என்ற டீலெக்ஸ் என்ற இருசக்கர வாகனத்தில் கனகராஜ் மற்றும் சரோஜா ஆகியோர்கள் தெற்கிலிருந்து வடக்கு

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

நோக்கி சென்று கொண்டிருந்தவர்கள் மீது அவர்களுக்கு பின்னால் கிரானைட் கல்லை ஏற்றிக்கொண்டு வந்த TN 59 BV 0040 என்ற பதிவெண்ட லாரி வேகமாக வந்து கனகராஜ் மற்றும் சரோஜா சென்ற இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியது– விபத்தை நேரில் பார்த்த நானும், கருப்புசாமி, பரசுராமன் சென்று பார்த்தபோது தலையில் காயம்பட்டு மேற்படி இரண்டு நபர்களின் உடல்களும் நசுங்கிய நிலையில் இருந்து. மேற்படி சம்பவம் குறித்து போலீசாருக்கு போன் மூலம் தகவல் கொடுத்தேன். ஆஜர் எதிரி தான் மேற்படி பதிவெண் கொண்ட லாரியை ஓட்டி வந்து விபத்தை ஏறபடுத்திய நபர் ஆவார். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்தில் இறந்து போன கனகராஜ் எனக்கு எந்த உறவும் இல்லை. விபத்தில் இறந்து போன சரோஜா என்பரும் எனக்கு எந்த உறவுமில்லை. சம்பவம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு நடந்தது என்றால் 30.09.2022 ம் தேதி இரவு 9.30 மணியளவில் நடைபெற்றது. சம்பவம் நடைபெறும் சாலை பாளையம் – கரூர் செல்லும் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்ற சாலை 40 அடி அகலம் இருக்கும் என்றால் சரிதான். இந்த விபத்தில் எதிரி ஓட்டி வந்த வாகனம் என்ன வகையான வாகனம் என்றால் Scooty இருசக்கர வாகனம் ஆகும். விபத்து நடைபெற்ற சாலையில் தடுப்பு சுவர்கள் எதுவுமில்லை. விபத்து நடைபெற்ற சாலை போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் சரிதான்.

2) சாலையின் ஓரத்தின் இருபக்கத்திலும் மின்கம்பங்கள் உள்ளதா என்றால் பெட்ரோல் பங்கில் உள்ளேதான் மின்கம்பம் உள்ளது. இறந்து போன கனகராஜ் மற்றும் சுசிலா வின் உடல் கரூர் பாளையம் ரோட்டில் நடுபகுதியில் கிடந்தது என்பதை பார்த்தீர்களா என்றால் பார்த்தேன். கனகராஜ் ஓட்டி சென்ற வாகனம் டீலெக்ஸ் வாகனம் ஆகும். கனகராஜ் ஓட்டி சென்ற வாகனத்தின் உடைபட்ட பகுதி குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் அதை நான்

ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

கவனிக்கவில்லை— சம்பவ இடத்திற்கு சென்று கனகராஜ் மற்றும் சரோஜா உடலை எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் 9.30 மணியளவில் பார்த்தேன். நான் சொல்வது போல் சம்பவ நடைபெற்ற இடத்தில் இல்லை என்று சொன்னாலும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல. என்னுடன் வந்தவர் யார் என்றால் என்னுடன் வேலை பார்க்கும் கருப்புசாமி ஆவார். சம்பவம் நடந்தவுடன் போலீசாருக்கு புகார் கொடுத்தேனா என்றால் நான் தான் புகார் கொடுத்தேன்.

3) சம்பவ இடத்திற்கு போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் இரவு 9.45 மணியயளவில் வந்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வரும் போது நான் அந்த இடத்தில் இல்லை. ஆம்புலன்ஸ்க்கு தகவல் கொடுத்தது யார் என்றால் நானும், கருப்புசாமி, பரசுராமன் தகவல் கொடுத்தோம். எத்தனை ஆம்புலன்ஸ் வந்தது என்று தெரியுமா என்றால் 2 வந்தது. எத்தனை மணிக்கு ஆம்புலன்ஸில் அவர்களின் உடல் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டது என்றால் இரவு 10.00 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கு போலீசார் வரும் போது எதிரி சம்பவ இடத்தில் தான் இருந்தாரா என்றால் இல்லை. இபி ஆபிஸ்க்கு சென்றுவிட்டார். நான் கரூர் அரசு மருத்துவனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் செல்லவில்லை.

4) இறந்து போன கனகராஜ் எதிரே வந்த இருசக்கர வாகனத்தை வருவதை கவனிக்காமல் எதிரி ஓட்டி சென்ற லாரியை முந்தி செல்லும் போது எதிரே வந்த வாகனம் நெருங்கி வந்ததனால் எதிரே வந்த வாகனத்தில் கெட்லைட்டில் கண் கூச்சம் ஏற்பட்டு எதிரி ஓட்டி சென்ற லாரியின் பின்புற சக்கரத்திற்கு முன்பாக விழுந்து விட்டார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்து இறந்து போன கனகராஜின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி நான் கூறுவது போன்று கவனக்குறைாவாக வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.